உங்கள் திருமண அழைப்பிதழ்களை எங்களிடம் அச்சடித்து உங்கள் திருமண நாள் நினைவுப் பரிசாக உங்கள் பெயர், படம் பொறிக்கப்பட்ட Keytag ஐ இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்



+94 77 31 60 600, +94 777 978 929

Since 1995

ஸ்டார் அச்சகம்

STAR PRINTERS

ALL TYPE OF PRINTING & STAMP MAKERS

502, பிரதான சாலை, சாய்ந்தமருது – 14.

- Your Partner in Printing -

ஸ்டார் – அச்சுக்கலையில் அனித்தரமான பிரகாசிப்பு



Metro லீடர்

# மெட்ரோ LEADER

தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'

CN ceynews

www.ceynews.lk

லீடர்: 03 | இதழ் -258 | 27.01.2023 | பக்கங்கள்: 05 | editorml21@gmail.com | விலை: 50/-


# நாட்டைப் பிரிக்க நான் தயாராக இல்லை!

–சர்வ கட்சி மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு–

ஜனாதிபதிக்கு இருக்கும் நிறைவேற்று அதிகாரத்துக்கமைய தற்போதுள்ள சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தான் கட்டுப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அதற்கமையவே 13ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த கட்டுப்பட்டுள்ளதாகவும், இல்லையெனில், பாராளுமன்றத்திற்கூடாக 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

02



## மின்வெட்டு தொடர்பாக மின்சார சபையுடன் பொதுப் பயன் பாடுகள் ஆணைக்குழு மோதல்



2022 க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் நடைபெறவுள்ள காலப்பகுதியில் எந்தவொரு மின்வெட்டுக்கும் அனுமதி வழங்கப் போவதில்லை என இலங்கை பொதுப் பயன் பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

02

## மக்களின் வாழ்க்கையுடன் விளையாடும் எவராலும் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது

-எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ-



தொடர்ச்சியான மக்கள் சேவையை வழங்கும் பிரதேச சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களை உருவாக்குவதே ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரே நோக்கமாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் நியமனமாகும் சகல உள்ளூராட்சி

02

## மு.காவின் பிரதித் தலைவர்களாக ஹரீஸ், ஹிஸ்புல்லா, நயிமுல்லா







02

## வாக்காளருக்கு ரூ.20 செலவிட முடியும்

-தேர்தல் ஆணையம்-

ஒரு வேட்பாளர் வாக்காளர்களுக்கு செல விடும் தொகையை தேர்தல் ஆணை யம் உயர்த்தியுள்ளது.

அதன்படி, ஒரு வேட்பாளர் ஒரு வாக்கா ளருக்கு ரூ.20 செலவு செய்யலாம் என ஆணையம் தெரிவித்துள்ளது.

வேட்பாளர் ஒரு வாக்காளருக்கு ரூ.15 மாத்திரமே செலவழிக்க முடியும் என முன்னர் அறிவிக்கப்பட்டது.

## குறைந்த செலவில் சுதந்திர தின நிகழ்வு:

-ஜனாதிபதி ஆலோசனை-



குறைந்த செலவில் பிரமா ண்டமாகவும் பெருமை யாகவும் சுதந்திர தினத்தை கொண்டாடுவது தொடர்பான முன் கலந்துரையாடல் நேற்று (26) ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

## நாட்டைப் பிரிக்க நான் தயாராக...

மேலும் 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினராலும் தனிப்பட்ட பிரேரணையை முன்வைக்க முடியுமெனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இதற்கு பெரும்பான்மை ஆதரவு கிடைக்கவில்லையெனில், அதனை நடைமுறைப்படுத்த நேரிடும் என்றும் தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (26) நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நான் 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் நீதியரசர் குழாம் முன்வைத் துள்ள தீர்ப்புக்கமையவே செயற்படுகின்றேன். விசேடமாக பிரதம நீதியரசர் பாலிந்த ரணசிங்கவின் தீர்ப்பிற்கமையவே செயற்படுகிறேன்.

எமது மாகாண சபைகளுக்கு லண்டன் நகரசபைக்குள்ள அதிகாரங்கள் கூட இல்லை. லண்டன் நகர சபைக்கு இதனை விடவும் அதிகாரங்கள் உள்ளன. எனவே இதனை பெடரல் இராச்சியம் எனக் கூறமுடியாது. இதனை பெடரல் இராச்சியமாவதைத் தவிர்க்க, ஜே.ஆர் ஜயவர்தன சட்டத்தரணிகளுடன் இணைந்து பல நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார். இதுவரை நாட்டில் தெரிவு செய்யப்பட்ட அனைத்து ஜனாதிப திகளும் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தவே தீர்மானித்தனர். இதனை இனிமேலும் நடைமுறைப்படுத்தவில்லையெனில், நாம் அதனை அரசியலமைப்பில் இருந்து நீக்க வேண்டும்.

இந்த நாட்டைப் பிரிக்க நான் தயாராக இல்லை. நாம் எவரும் தயாரில்லை. இலங்கையில் உள்ள தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் பறங்கியர் உட்பட ஏனைய குழுக்களுடன் சிங்களவர்கள் இணைந்து வாழ வேண்டும். நமது தேசிய கீதத்தில் “ஒரு தாயின் மக்கள்” என்பதை நாம் பாதுகாத்தால், நம் நாடு ஒற்றுமையுடன் முன்னேற முடியும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை.

பொருளாதாரப் பிரச்சினை, அரசியல் பிரச்சினை என்பவற்றை நாம் அனைவரும் இணங்கும் வகையில் படிப்படியாக தீர்த்துக் கொள்ள முடியும். இந்தப் பிரச்சினைகளில் தங்கிவிடாது, பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு முன்நோக்கிச் செல்வோம்.

நாம் யாரும் காட்டிக்கொடுக்கப் போவதில்லை. நாட்டைப் பிரிக்கப் போவதில்லை. நாம் அனைவரும் ஒன்றிணைந்துள்ளோம். இணைந்து பயணிப்போம்.’’ என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

## மின்வெட்டு தொடர்பாக...

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மின்வெட்டுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என இலங்கை மின்சார சபைக்கு (CEB) அனுப்பியுள்ள கடிதத்தில் PUCSL தெரிவித்துள்ளது.

இன்று (27) மின்சாரத் தடையை அமுல்படுத்துமாறு இலங்கை மின்சார சபையினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, 2023 ஜனவரி 26 முதல் 2023 பெப்ரவரி 17 ஆம் திகதி வரை மின்வெட்டுக்கு அனுமதி வழங்கப் போவதில்லை என தெரிவித்துள்ளது.

2023 பெப்ரவரி 17ஆம் திகதி வரை தடையில்லா மின்சாரம் வழங்குமாறும், குறித்த காலப்பகுதியில் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்துள்ள பொதுச்சபை, CEBக்கு அறிவுறுத்தியுள்ளது.

## மு.காவின் பிரதித் தலைவர்களாக...

முன்னாள் இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ், முன்னாள் ஆளுனர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம். நயீமுல்லாஹ் ஆகியோர் கட்சியின் பிரதித் தலைவர்களாக நியமிக்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் கட்சியின் தலைமையகமான தாறுஸ்ஸலாத்தில் இன்று (27) வெள்ளிக்கிழமை நடந்த கட்சியின் உயர்பீட கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

குறித்த நியமனங்களை அனுமதிப்பதற்கான யாப்புத் திருத்தம் அடுத்த பேராளர் மாநாட்டின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரசியல் அமைப்பின் 20வது சீர்திருத்தம் மற்றும் 2022ம் ஆண்டு வரவு செலவுத் திட்டப் பிரேரணை ஆகியவற்றுக்கு கட்சியின் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தமை தொடர்பில் கட்சியின் தலைமையினால் பிரதித் தலைவர் பதவி மற்றும் உயர்பீட உறுப்பினர் ஆகியவற்றில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# அம்பாறை மாவட்ட சமுர்த்தி முகாமையாளர்களாக கடமையாற்றியவர்களுக்கு கௌரவிப்பு நிகழ்வு

அம்பாறை மாவட்டத்தில் சமுர்த்தி முகாமையாளர்களாக கடமையாற்றி ஓய்வுபெற்றவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நாளை (28) சனிக்கிழமை நிந்தவூர் அட்டப்பள்ளம் றிலக்ஸ் கார்டன் ஹோட்டலில் இடம் பெறவுள்ளது.

அம்பாரை மாவட்ட தமிழ் பேசும் சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவரும் நிந்தவூர் பிரதேச செயலக தலைமைப்பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளருமான ஏ.சீ.அன்வர் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வுக்கு அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். சப்ராஸ் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர்களான திருமதி அருந்ததி மகேஸ்வரன், எஸ்.எல்.எம். மசூர், ஈ.யோகராஜா, எம்.ஏ. இமாமுதீன், எச்.எம்.ஏ.அலீம் ஆகியோர் கௌரவிக்கப் படவுள்ளனர்.

இதில் சமுர்த்தி முகாமையாளர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள் ளமை குறிப்பிடத்தக்கது.

## மக்களின் வாழ்க்கையுடன் விளையாடும்...

மன்ற உறுப்பினர்களுக்கும் தனித்துவமான சட்ட ஒழுங்கு முறைகள் உள்ளதாகவும், அவற்றை மீறும் எந்த உறுப்பினருக்கும் தண்டனை பிறப்பிக்கப்படும் எனவும், அவர்களுக்கு எதிராக தவறாது ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வெளியேற்றப்படுவார்கள் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தீர்வற்ற நாட்டுக்குத் தீர்வு எனும் கருப்பொருளில் ஐக்கிய மக்கள் சக்தியால் தெஹியத்தகண்டியில் இன்று (27) நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமது உறுப்பினர்களுக்கு ஒப்பந்தங்கள் தடை செய்யப்பட்டுள்ளதாகவும், பொதுமக்களின் சொத்துக்களுடன் விளையாடுவதற்கு அவர்களுக்கு அனுமதியில்லை எனவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ஐக்கிய மக்கள் சக்தியால் விழுமியம் சார் உள்ளூராட்சி மன்றங்களை கட்டியெழுப்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

வரலாற்றில் எக்காலத்திலும் ராஜபக்சர்களை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்காக ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது தானோ வீடு வீடாக சென்று பிரச்சாரம் செய்யவில்லை எனவும், பிரசார கூட்டங்களை நடத்தவில்லை எனவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நாட்டை அழித்து மக்களின் வாழ்க்கையுடன் விளையாடும் எவராலும் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது எனவும் தெரிவித்தார்.

அரசியல்வாதிகள் உள்ளிட்ட நபர்களால் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை மீட்பதற்கான சட்ட மூலமொன்று பாராளுமன்றத்திற்கு கொண்டு வருவதாகவும், சர்வ கட்சிகள் அடங்கிய ஆணைக்குழுவொன்று ஸ்தாபிக்கப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## குறைந்த செலவில் சுதந்திர தின...

நாட்டின் தற்போதைய நிதி நிலைமை தொடர்பில் அவதானம் செலுத்துவது அதிகாரிகள் மற்றும் அரசியல் அதிகார சபைகளின் பொறுப்பாகும் எனவும், அதற்காக தேவையான செலவினங்களை மதிப்பீடு செய்து உண்மையில் செலவு செய்வதாகவும் குறிப்பிட்டார்.

75 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்வது தொடர்பில் மக்கள் மத்தியில் பாரிய எதிர்ப்பு காணப்படுவதாகவும் அது தொடர்பில் அவதானம் செலுத்தி அதற்கான செலவீனங்களை குறைக்க முயற்சிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சுதந்திர தின விழாவை ஒட்டி ஜனவரி 2 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை பல சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஜனாதிபதியின் தலைமை அதிகாரி சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க மற்றும் அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி, பாதுகாப்பு வெளிவிவகார, கல்வி, பௌத்த மற்றும் கலாசார அலுவல்கள், ஊடகங்கள், நிதி அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திறைசேரி உள்ளிட்ட வரி நிறுவனங்களின் அதிகாரிகள் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

# அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் வைரவிழா, பட்டமளிப்பும் சைவமாநாடும்



அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடாத்திய வைரவிழா சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் சைவ மாநாடும் ஞாயிற்றுக்கிழமை 2023.01.22 தொடக்கம் மாலை 6.00மணி வரை தென்மராட்சி சாவகச்சேரி பூமாரி மண்டபத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தலைவர் சைவப்புலவர் சி.கா.கமலநாதன் தலைமையில் இடம்பெற்றது.

காலை அமர்வு சைவப்புலவர் மு.திருஞான சம்பந்தபிள்ளை அரங்க நிகழ்வாக இடம்பெற்றது. சாவகச்சேரி புராதன வாரிவானேஸ்வரர் ஆதியில் எழுந்தருளி இருந்த இடத்தில் அமைந்துள்ள சிவன்கோவில் வழிபாட்டின் பின்னர் சந்தான குரவர்கள் எழுந்தருள விருந்தினர் விழா மண்டபம் வருகைதந்தனர். அகச்சந்தான குரவர்கள் புறச்சந்தான குரவர்களிற்கான குருபூசை நிகழ்வினைத் தொடர்ந்து இணுணையூர் சகோதார்கள் அழகேசன் அமிர்தலோஜன், அழகேசன் அமிர்தசிந்துஜன் ஆகியோரது சிவஞானபோத இசை ஆராதனை நிகழ்வு இடம்பெற்றது. வரவேற்பு நடனத்தினை செல்வி. ஸ்ருதி சிவகுமாரகுருக்கள், செல்வி. மஹதி கைலாஜராஜகுருக்கள் வழங்கினார்கள். அரங்கத் திறப்புரையினை உபதேர்வுச் செயலாளர் சைவப்புலவர் லீலாவதி அருளையா வழங்கினார்.

பிரதம விருந்தினராக பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா துணைவேந்தர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலந்துகொண்டார். நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் , தமிழ்நாடு தர்மபுர ஆதீனம் ஸ்ரீமத் மீனாட்சி சுந்தர தம்பிரான் சுவாமிகள் , சிவகுருநாதவேதாந்தபீடம் ஸ்ரீவேத வித்தியா சாகரர் சுவாமிகள் திருமுன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக கலாநிதி.பொ.சந்திரசேகரம் தலைவர் சைவசித்தாந்தத்துறை இந்துக் கற்கைகள் பீடம். பல்கலைக்கழகம் கௌரவ விருந்தினர். த.கிருபாகரன் வலயக்கல்வி பணிப்பாளர். தென்மராட்சி விசேட அதிதிகளாக சிவஸ்ரீகு. ஸ்ரீகாந்தக் குருக்கள் பிரதரம குரு ஆதீனகர்த்தா மீசாலை வடக்கு ஆலடிப் புலம்ஸ்ரீ நடராஜ கந்தசுவாமி ஆலயம் , சிவஸ்ரீ இ.குமாரசுவாமிக் குருக்கள் பிரதமகுரு வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலயம் சா. உருத்திரபசுபதி சைவசித்தாந்த பண்டிதர் செ.சியபாதம் அவர்கள் வி.தயாபரன் சைசவப்புலவர் வ.தயாபரசிவம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சைவாகம பூஷணம் விருதினை சிவஸ்ரீ கு.ஸ்ரீகாந்தக் குருக்கள் , சிவஸ்ரீ க.குமாரசுவாமிக் குருக்கள் , சிவநெறிப் புரவலர் விருதினை வி.தயாரான் சிவநெறிப்பிரகாசர் விருதினை சமஜஜோதி க.நிஜலிங்கம் பௌராணிக ஞானச்செம்தல் விருதினை சா.உருத்திரபசுபதி , சைவசித்தாந்த பண்டிதர் செ.சிவபாதம் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

வைர விழாச் சைவநாதம் மலர் வெளியீட்டுரையினை பிரம்மஸ்ரீ சு.நவநீதகிருஷ்ணன் விரிவுரையாளர் சமயம் கிருந்த்துறை இந்துக கற்கைகள் பீடம் நயப்புரையினை ஈ.குமரன் சிரேஷ்ட விரிவுரையாளர் தமிழ்த்துறை ஆகியோர் வழங்கினார்கள். முதற்பிரதியினை கலாநிதி வைத்தியலிங்கம் சிவராசா பிரபல தொழிலதிபர் சிவா ரேடிங்கோ கொழும்பு யாழ்ப்பாணம் அவர்கள் பெற்றுக்கொண்டார். நன்றியுரையினை அகில இலங்கை சைவப் புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் வழங்கினார். நிகழ்வினை சைவப்புலவர் சங்கப் பொருளாளர் சைவப்புலவர் ச.முகுந்தன் நெறிப்படுத்தினார்.

மாலை அமர்வு சைவப்புலவர் சு.செல்லத்துரை அரங்காக சைவப்புலவர் சிவானந்தசோறி ஞானசூரியம் (உபதலைவர் அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்) தலைமையில் இடம்பெற்றது. முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாட் பேராசிரியர் ப.கோபால கிருஷ்ண ஐயர், சிறப்பு விருந்தினர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிந்தாந்தத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி திருமதி.விக்னேஸ்வரி பவனேசன் ஆகியோர். கலந்து கொண்டார்கள். அரங்கத் திறப்புரையினை சைவப்புலவர் க.குணரத்தினம் வரவேற்புரையினை சைவப்புலவர் க.பத்மானந்தன் வாழ்த்துரையினை சு.பரமானந்தம் பீடாதிபதி யாழ்ப்பாணம் தேசிய கல்லியற் கல்லூரி ஆகியோர் வழங்கினர்

கலை நிகழ்வுகளாக வைர விழாச் சைவசமயப் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களது கலை நிகழ்வுகளான புராண படனம் பண்ணிசை கதாப் பிரசங்கம் மிருதங்கம் வில்லுப்பாட்டு நாடகம் இடம்பெற்றது. ஐவர விழா சைவசமயத் திறன் விருத்திப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களிற்கான பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது. நன்றியுரையினை சைவப்புலவர் செ.த.குமரன் வழங்கினார்.

2021 ஆம் ஆண்டு சித்தியடைந்த சைவப்புலவர்கள் வேலாப்போடி மகேசரெத்தினம் (மட்டக்களப்பு) திருமதி விஜயலட்சுமி இராமச்சந்திரா (மட்டக்களப்பு) திருமதி. இராதா ஞானரெத்தினம் (மட்டக்களப்பு) திருமதி. பத்மலோஜினி ஸ்ரீராமன் (யாழ்ப்பாணம்) கலாநிதி இளையதம்பி ஜெயந்திரன் (மட்டக்களப்பு)

2021 சித்தியடைந்த இளஞ்சைவப்புலவர்கள் செல்வி. சேனாபதி தர்மிதா (மட்டக்களப்பு) செல்வி கமலநாதன் மிதுஷ்சனா (மட்டக்களப்பு) செல்வி தவநேசன் கியோமிதா (மட்டக்களப்பு) செல்வி. உதயகுமார் அஜித்தா (மட்டக்களப்பு) செல்வி. கிருஸ்ணகுமார் ஜிதர்சினி (மட்டக்களப்பு) செல்வி கிருபராசா மேனுஜா (பொலன்னறுவை) கிருபைரெத்தினம் சர்வேஸ்வரன் (மட்டக்களப்பு) செல்வி. வடிவேல் கஸ்தூரி (மட்டக்களப்பு) செல்வி. சந்திரன் கஜிதா (மன்னார்) நித்தியானந்தன் பாபுதரன் (யாழ்ப்பாணம்) கிருஸ்ணன் வரதராசன் (யாழ்ப்பாணம்) செல்வக்குமார் கிருஸ்ணகுமார் (யாழ்ப்பாணம்) சிவறி குமாரசாமிசர்மா சுவாமிநாதசர்மா (யாழ்ப்பாணம்) யோகநாதன் சிவநந்தினி (மட்டக்களப்பு) 2022 ஆண்டு சித்தியடைந்த சைவப்புலவர்கள். திருமதி. செல்வராஜ் உதயகௌரி (கொழும்பு) திருமதி. இரத்தினேஸ்வரி சந்திரலிங்கம் (மட்டக்களப்பு) பொன்னம்பலவாணர் கனகரத்தினம் (யாழ்ப்பாணம்) திருமதி. புவனராணி இரகுநாதன் (யாழ்ப்பாணம்) துரைசிங்கம் பிரபாசன் (யாழ்ப்பாணம்) திருமதி மகிபா வசிகரன் (யாழ்ப்பாணம்) திருமதி. சுந்தரமதி வேதநாயகம் (மட்டக்களப்பு) சாம்பசிவம் நவீந்திரதாஸ் (திருகோணமலை) மகேந்திரன் விமலகாந்தன் (பொலன்னறுவை) திருமதி. மல்லிகா சிவராசா (கொழும்பு)

2022 ஆம்ஆண்டு சித்தியடைந்த இளஞ்சைவப்புலவர்கள் வல்லிபுரம் பரமேஸ்வரம்பிள்ளை (யாழ்ப்பாணம்) செல்வி சரமினி கிருஸ்ணபிள்ளை (பொலன்னறுவை) செல்வி ஜெயாளினி கந்தசாமி (பொலன்னறுவை) திருமதி. சிவப்பிரியா ராஜ்குமார் (யாழ்ப்பாணம்) மகேஸ்வரன் பவிதரன் (மட்டக்களப்பு) செல்வி. யதுஷா முருகேசு (பொலன்னறுவை) செல்வி. பிரண்ஜா நேதீஸ்வரன் (கிளிநொச்சி) திருமதி. சந்திரவதனி தவராசா (யாழ்ப்பாணம்) தர்மராஜா சுதர்சன் (யாழ்ப்பாணம் மாரிமுத்து ஸ்ரீகாந்தன் (பதுளை) செல்வி. துர்க்கா சுப்பிரமணியம் (கொழும்பு) கிருஸ்ணதாஸ் டனுஸ்காந் (மட்டக்களப்பு) புலேந்திரன் தினேஸ்காந் (மட்டக்களப்பு) செல்வி. கீரத்தனா குருநாதபிள்ளை (அம்பாறை) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

-எஸ்.ரி.குமரன்-




# அரசின் வரிச்சுமையை கண்டித்து

## கல்முனையில் சுகாதார ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்






**சர்ஜூன் லாபீர்**

அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்திற்கான வரி விதிப்பு சம்பந்தமாக தொழில் வல்லுனர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு நேற்று (26) மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றினை கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு முன்பாக நடாத்தியது.

"அநீதியான அரசின் தன்னிச்சையான மக்களுக்கு பாதகமான வரிக்கொள்கையை கண்டிப்போம்" எனும் தொனிப்பொருளில் பல்வேறுபட்ட தொழிற்சங்கங்கள் இணைந்து இக்கண்ட ஆரப்பட்டத்தினை மேற்கொண்டனர்.

அதிகரித்த வரிகளை வசூலிப்பதன் மூலம் பொதுத் துறையில் பணியாற்றும் தொழில்வாண்மை மிக்கோருக்கான ஊதியத்தினை குறைப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதுடன் மட்டும் நின்றுவிடாமல், அவ்வாறு வரிகள் விதிக்கப்படுவது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காகத்தான் என்ற போலியான பிரச்சாரத்தினையும் முன்னெடுத்து வருகின்றது . ஆனால் எமது வரிகள் மூலம் திரட்டப்படும் பணம் நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் நோக்கத்திற்காக ஒருபோதும் பயன்படுத்தப்படபோவதில்லை . இந்த வரி அதிகரிப்பு நியாயமற்றது என்பது மட்டுமல்ல.

இதனால் எமது தேசம் அதன் சாத்தியமான முழு வளத்தினையும் இழக்கும் அபாயம் உள்ளது. என்ன விலையினைக் கொடுத்தாவது இம்மோசமான பேரிடர் நிலையினை முற்று முழுதாக தடுக்கவேண்டும். எமது நாட்டில் இன்று நிலவுகின்ற பொறுப்பற்ற, அநீதியான நிலை குடிமக்களை ஆதரவற்ற நிலைக்குத் தள்ளியுள்ளதனையும் இங்கு நாம் கவனத்திற்கொள்ள வேண்டியுள்ளது என்ற விடயத்தை மையப்படுத்தி ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பட்டத்தினை மேற்கொண்டனர்.

திணிக்காதே திணிக்காதே வரியினை திணிக்காதே!, வெளியேற்றாதே வெளியேற்றாதே மூளைசாலிகளை வெளியேற்றாதே!, அடிக்காதே அடிக்காதே மக்களின் வயிற்றில் அடிக்காதே! எனும் பல சுலோகங்களை முன்வைத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கண்டனத்தை மேற்கொண்டனர்

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம், இலங்கை மின்சார சபை ஊழியர்கள், வைத்தியர்களின் சங்கம் ஆகிய தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## கல்முனை அல் –மிஸ்பாஹ் வித்தியாலயத்தில் நான்கு மாணவர்கள் தெரிவு



**எம்.என்.எம்.அப்ராஸ்**

இம்முறை வெளியாகிய புலமைப்பரிசில் பரீட்சையில் கல்முனை அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தில் வெட்டுப்புள்ளிக்கு மேல் 04 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளதுடன்,142 புள்ளிகளை 2 மாணவர்களும் 141 புள்ளிகளை 2 மாணவர்களும் பெற்று வெட்டுப் புள்ளியை அண்மித்துடன் மேலும் இப்பரீட்சைக்கு தோற்றிய 85 மாணவர்களில் 69 மாணவர்கள் 70 புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளதாக பாடசாலையின் அதிபர் எம்.ஐ.அப்துல் ரசாக் தெரிவித்தார்.

மேலும் இம்மாணவர்களுக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்கும்,பாடசாலை சமூகம் சார்பாக பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் அதிபர் எம்.ஐ.அப்துல் ரசாக் தெரிவித்தார்.

## ஓட்டமாவடி கல்விக் கோட்டத்தில் சரீப் அலி முதலிடம்

**எச்.எம்.எம்.பர்ஸான்**

வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேற்றின் படி ஓட்டமாவடி கல்விக் கோட்டத்தில் ஓட்டமாவடி சரீப் அலி வித்தியாலயம் கோட்டத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளதாக அதிபர் ஏ.சீ.எம்.அஜ்மீர் தெரிவித்தார்.

பரீட்சை எழுதிய மாணவர்களில் 30 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இவ்வாறு சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கும், அயராது உழைத்த ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் மற்றும் வழிகாட்டல்களையும் ஒத்துழைப்புகளையும் வழங்கிய வலயக் கல்விப் பணிப்பாளர், ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.ரி.அஜ்மீர், ஆரம்பப் பிரிவுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.ஜாபிர் கரீம் மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் உட்பட அனைவருக்கும் அதிபர் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

## கந்தளாய் ஆயிஷா மகளிர் வித்தியாலயத்தில் ஆறு பேர் சித்தி



**எப்.முபாரக்**

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட கந்தளாய் ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் வெளியாகியுள்ள ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் ஆறு மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக பாடசாலையின் அதிபர் எஸ்.சாகிதீன் தெரிவித்தார்.

அஸ்மி சைனப் ஆரா 177, இன்ஷாப் ஆலிப் 146, முஹம்மட் இப்திகார் சுல்பா 144, றியாஸ் ரய்யான் அஹம்மட் 143, சுக்ரி சனா 145, ஏ.டபிள்யு. ஹம்மாத் 142 ஆகிய ஆறு மாணவர்கள் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதாக அப்பாடசாலையின் அதிபர் தெரிவித்தார்.

## ஒலுவில் அல் மதீனா வித்தியாலயம் புலமைப் பரீட்சையில் சாதனை



**எஸ்.அஷ்ரப்கான்**

ஒலுவில் அல் மதீனா வித்தியாலயத்தில் 2022 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய 26 மாணவர்களில் 4 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர்.

எம்.ஏ.ஹனிகா ஹானி (153 புள்ளிகள்), எம்.ஐ. அஸ்னத் ஸாறா (148 புள்ளிகள்), எம்.என். நப்ஹான் (144 புள்ளிகள்), சனாரி ஹாத்தூன் (143 புள்ளிகள்) பெற்றுள்ளனர்.

ஏனைய மாணவர்கள் அனைவரும் திறமைச் சித்தியை பெற்று பாடசாலைக்கும் சமூகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் ஆறு மாணவர்கள் சித்தி



**ஏ.எச்.எம்.ஹாரீஸ்**

2022 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சாளம்பைக்கேனி அஸ் ஸிறாஜ் தேசிய பாடசாலையில் இருந்து ஆறு மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

அந்த வகையில் உஸ்மான்-153, அஸ்ஜா-153, மிறோஸ்-152, இப்தாத் சமா-148, சப்ரி-143, ரவுசான்-143 ஆகிய மாணவர்களுக்கு பாடசாலையின் அதிபர் எஸ்.எம்.எம். யூசுப் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டனர்.

மேலும் தரம் 5 மாணவர்களின் கல்விக்கு உறுதுணையாக நின்று வழிகாட்டிய ஆசிரியர்களான வாயீஸ், பர்சானா ஆகியோருக்கும், மாணவர்களின் பெற்றோர்களுக்கும் பிரதி அதிபர் அமீருள் ஹக், பாடசாலை சமுகம் மற்றும் பழைய மாணவர் சங்கத்தினர் பாடசாலை சார்பாக நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.

# மீதியை மூன்றாக பிரிப்பதே ஜனநாயகத் தீர்வு

## மாற்றத்திற்கான முன்னணி செயற்பாட்டாளர்– சட்டத்தரணி றைசுல் ஹாதி

**ஏ.எல்.எம். ஷினாஸ்**

கல்முனை மாநகர சபையினல் இருந்து சாய்ந்தமருது பிரிந்து செல்லும் போது மீதமாகவுள்ள எல்லையை மூன்றாக பிரிப்பதே ஜனநாயகத் தீர்வு  என மாற்றத்திற்கான முன்னணியின் பிரதான செயற்பாட்டாளரும் சிரேஸ்ட சட்டத்தரணியுமான றைசுல் ஹாதி ஊடகங்களுக்கு தெரிவித்தார். சமகால அரசியல் நகர்வுகள் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த சட்டத்தரணி,

தமக்கான அரசியலை நாங்கள் பேசாதிருந்தால் வெறுக்கும் அரசியலால் அடிமைகளாக ஆளப்படுவோம். மருதமுனை மக்கள் கட்சி அரசியலை மறந்து ஒற்றுமைப்பட்டு சுயாதீனமான அரசியல் அதிகாரத்தைப் பெற்றேயாக வேண்டும். 4 பேர் வாழ்வாதாரமாக 10 கோடிக்கு மேல் சம்பளம் பெற்றதைத் தவிர கண்டது எதுவுமேயில்லை. எங்களுடைய வரிப்பணத்தினால் மாநகர ஆணையாளரும் ஊழியர்களும் பல்பினையும், வடிகானை துப்பரவாக்குவதையும், கழிவு அகற்றுவதையும் வியாபார அனுமதிப்பத்திரம் வழங்குவதையும் செய்யலாம்.



நமது மருதமுனைக்கு ஏன் நகர சபை அவசியம்? அதனால் எவ்வளவு நன்மைகள் கிடைக்கும்? என்பவற்றை அபிவிருத்திகள் உள்ளூராட்சி சபைகளை மையப்படுத்தி இடம்பெறுகின்ற போது கண்டு கொள்ளலாம். சபை ஒன்று இல்லாமல் இருப்பது எமது ஊருக்கு எவ்வளவு இழப்பும், அநீதியும் என்பது வெள்ளிடைமலை.

சாய்ந்தமருதுக்கு தனியான எல்லை நிர்ணயம் உள்ளதால் மீதமாகவுள்ள பிரதேசத்தை 1987க்கு முன்பிருந்தவாறு எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமிக்கப்பட்டு கரைவாகு வடக்கு கிராம சபை, கல்முனை பட்டின சபை, கரைவாகு மேற்கு கிராம சபை போன்ற உள்ளூராட்சி சபைகளையும், பொது நிர்வாகத்தையும் பிரிப்பது பொருத்தமான ஜனநாயகமாகும். கல்முனை எதிர்காலத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினையிலிருந்து விடுபட முஸ்லிம், தமிழ் கட்சித் தலைவர்கள் பேச வேண்டும். அதிகாரத்தினால் அடக்கியாள நினைப்பவனை என்றோ ஒரு நாள் மக்கள் கூட்டம் விரட்டியடிக்கும்.

இது தொடர்பிலான கோரிக்கைப் பிரதிகள் தேசிய காங்கிறஸ் கட்சித் தலைவர் அதாவுல்லாஹ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்,  அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றிஷாட் பதியுதீன், அரசாங்க அதிபர் போன்றவர்களிடம் ஏற்கனவே கையளிக்கப்பட்டுள்ளது. மருதமுனையை பிரதிநிதித்துவப்படுத்தி மருதூர்கனி, மசூர்மௌலான, துல்ஷான் போன்ற ஆண்ட பரம்பரை ஆள நினைப்பதில் தவறேதுமில்லை. எதிர்காலத்தில் இதற்கான அகிம்சை வழியிலான போராட்டத்தை சிவில் சமூகம் முன்னெடுக்க வேண்டியது காலத்தின் தேவையாகும் என்று தெரிவித்தார்

## அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரியில் சேவை நலன் பாராட்டு



**எம்.ஜே.எம்.சஜீத்**

அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரியில் 30 வருட சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் கல்விசாரா உத்தியோகத்தர் யூ.எல்.எம். ஹுசையின் சேவையினை பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கும் நிகழ்வு கல்விசாரா நலன்புரி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் பதிவாளர் திரு. ஏ.புஷ்பராஜ் தலைமையில் கல்லூரி கேட்போர் கூடத்தில்  (20) சிறப்பாக இடம்பெற்றது.

பதிவாளர் திரு ஏ.புஷ்பராஜ்வினால் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டதுடன் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கல்லூரியின் பீடாதிபதி சட்டத்தரணி கே.புண்ணிய மூர்த்தியினால்  30 வருட சேவையினை பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.  இதன்போது நிதி மற்றும் நிருவாகத்திற்கு பொறுப்பான உப பீடாதிபதி எம்.சீ.ஜுனைட்டினால் நலன்புரிச் சங்கத்தின் காசோலை வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நலன்புரிச் சங்கத்தின் செயலாளர், பொருளாளர் மற்றும் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் உட்பட அனைத்து கல்விசாரா உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# புலமைப் பரிசில் பெறுபேற்றில் யாழ். வலயம் முதலிடம்

தற்போது வெளியாகிய தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் புனித யோன் பொஸ்கோ ஆரம்ப பாடசாலை மாணவன் யலீபன் யதூசிகன் 191 புள்ளிகளைப் பெற்று சாதனை புரிந்துள்ளார்.

இப்புள்ளியே அகில இலங்கையில் தமிழ்மொழி மூல பெறுபேற்றில் முன்னிலையாகவுள்ளது என அறிய முடிகிறது.

யோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் இம்முறை 216 மாணவர்கள் பரீட்சையில் தோற்றியதில் 154 மாணவர்கள் வெட்டுப் புள்ளியை தாண்டியுள்ளனர்.

இதேபோன்று யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் 217 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய அதில் 124 மாணவர்கள் வெட்டுப்புள்ளியை தாண்டியுள்ளனர். இவர்களில் கிரிதரன் அர்மிதா என்ற மாணவி 186 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

யாழ். கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் மதுசணன் புலமைப் பரிசில் பரீட்சையில் 186 புள்ளிகள் பெற்றுள்ளார்.

இதேவேளை கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் இம்முறை 188 மாணவர்கள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றியதில் 91

| No. | Education Zone | No of Sat | Obtained Marks 70 or Above | |
|---|---|---|---|---|
| | | | No. | % |
| 1 | Jaffna | 2747 | 2281 | 83.04 |
| 2 | Thenmarachchi | 901 | 736 | 81.69 |
| 3 | Vadamarachchi | 1420 | 1151 | 81.06 |
| 4 | Vavuniya South | 2296 | 1833 | 79.83 |
| 5 | Madhu | 454 | 360 | 79.3 |
| 6 | Mullaitivu | 1528 | 1205 | 78.86 |
| 7 | Kilinichchi North | 543 | 428 | 78.82 |
| 8 | Islands | 536 | 422 | 78.73 |
| 9 | Valikamam | 2618 | 2045 | 78.11 |
| 10 | Vavuniya North | 610 | 474 | 77.7 |
| 11 | Kilinichchi South | 1642 | 1213 | 73.87 |
| 12 | Mannar | 1705 | 1257 | 73.72 |
| 13 | Thunukkai | 627 | 441 | 70.33 |

மாணவர்கள் வெட்டுப்புள்ளியைத் தாண்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட கிராமப்புற பாடசாலையான கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயத்தில் 7 மாணவர்கள் தோற்றி, அதில் 5 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

வடமாகாணத்திலுள்ள கல்வி வலயங்களில் யாழ்ப்பாண வலயத்தில் இம்முறை வெட்டுப் புள்ளியினை தாண்டி புள்ளிகளைப் பெற்றோர் 697 பேர் இது 25.37 வீதமாகவும் சித்திப் புள்ளியான 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் 2281 ஆகவும் காணப்படும் அதேவேளை இது 83.04 வீதமாகவும் காணப்படுகின்றது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இம்முறை சித்தி வீதம் அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியா கலாசார அதிகார சபையின் நிருவாகத் தெரிவு



**எம்.ஏ.முகமட்**

2023 ஆம் ஆண்டுக்கான கிண்ணியா கலாசார அதிகார சபையின் புதிய நிருவாகத் தெரிவு (25) கிண்ணியா பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

அதன் தலைவராக கிண்ணியா பிரதேச செயலாளரும், ஒருங்கிணைப்பாளராக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தரும் யாப்பின் பிரகாரம் செயற்படுவர். ஏனைய நிறைவேற்று உறுப்பினர்கள் ஏக மனதாக தெரிவு செய்யப்பட்டனர். கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச். முகம்மது கனி தலைவராகவும்,கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜே.எம். ஹில்மி ஒருங்கிணைப்பாளராகவும், கலாபூஷணம் ஏ.கௌரிதாசன் உப தலைவராகவும், எம்.ரீ. சஜாத் செயலாளராகவும், எம்.ஏ.முகமட் உப செயலாளராகவும், என்.எம். நஜாத் பொருளாளராகவும், எம். ஏ.அக்பர் சலீம் (ஓய்வு பெற்ற அதிபர்) ஆலோசகராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

# வட மாகாண இளைஞர்ளுக்கான அறிவிப்பு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் சிறுவர் இலக்கிய துறையில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கான இலவச ஒரு நாள் கருத்தமர்வு நடைபெறவுள்ளது.

மேற்படி கருத்தமர்வானது எதிர்வரும் 29.01.2023 ஆம் திகதி மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 2.00 மணி வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் தங்களது பெயர், தொலைபேசி இலக்க விபரங்களை கடமை நேரத்தில் 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்கவும் என வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ராஜமல்லிகை தெரிவித்துள்ளார்.